## October 13, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மத்திய மற்றும் தென்கிழக்கு மெக்சிகோவில் பெய்த பலத்த மழையால் ஏற்பட்ட மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி தவர்களின் எண்ணிக்கை 41-ஆக அதிகரித்துள்ளது.
   i. வெராக்ரூஸ் மாநிலத்தில் மட்டும் அக்டோபர் 6 முதல் 9-ஆம் தேதி வரை 540 மி.மீ.க்கும் அதிகமான மழை பெய்துள்ளது.
   ii. காசோன்ஸ் நதி நிரம்பி வழிந்ததால், கார்கள் சாலைகளில் அடித்துச் செல் லப்பட்டு ஒன்றோடொன்று மோதிக் கொண்டன.
2. இஸ்ரேல்- ஹமாஸ் போர் நிறுத்தத்தைக் கொண்டாடும் வகையில், எகிப்தின் ஷரம் அல்-ஷேக் நகரில் திங்கள்கிழமை (அக். 13) சர்வதேச அமைதி மாநாடு நடைபெறவுள்ளது.
   i. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உள்பட பல்வேறு உலகத் தலைவர்கள் பங்கேற்கும் இந்த மாநாட்டில் காஸாவில் நிரந்தர அமைதிக்கான வழிமுறைகள் விவாதிக்கப்பட உள்ளன; காஸா அமைதி ஒப்பந்தம் முறைப்படி கையொப்பமாகும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
   ii. இஸ்ரேல்- காஸாவின் ஹமாஸ் அமைப்பினர் இடையே கடந்த 2023-ஆம் ஆண்டில் தொடங்கிய போரை முடிவுக்குக் கொண்டுவர 20 அம்சங்களுடன் கூடிய அமைதி ஒப்பந்தத்தை அமெரிக்க அதிபர் டிரம்ப் அண்மையில் முன்மொழிந்தார். இந்த ஒப்பந்தத்தின் முதல்கட்டத்தை ஏற்றுக் கொண்டு, எஞ்சியுள்ள பிணைக் கைதிகள்-சிறைக் கைதிகளை விடுவிக்கவும், போரை தற்காலிகமாக நிறுத்தவும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் சில தினங்களுக்கு முன் ஒப்புக் கொண்டன. இஸ்ரேலிய பிணைக் கைதிகளை ஹமாஸ் விடுவிக்கும் வகையில், காஸாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து அந்நாட்டுப் படையினர் திரும்பப் பெறப்பட்டுள்ளனர்.
   iii. டிரம்ப்பின் முயற்சிக்கு இந்தியா உள்பட பல்வேறு நாடுகளும் வரவேற்பு தெரிவித்தன.
   iv. அமெரிக்க அதிபர் டிரம்ப், எகிப்து அதிபர் அப்தல் ஃபத்தா அல்-சிசி ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர், பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான், இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி உள்பட 20-க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர். ஐ.நா.பொதுச்செயலர் அன்டோனியோ குட்டெரெஸூம் கலந்து கொள்கிறார்.
   v. இஸ்ரேல்- ஹமாஸ் நிறுத்தம் ஏற்பட அமெரிக்கா எகிப்துடன் கத்தாரும் மத்தியதராக செயல்பட்டது குறிப்பிடத் தக்கது.
3. தென் சீனக் கடலில் தங்கள் நாட்டின் கப்பலை சீன கடலோர காவல் படை கப்பல் தாக்கி சேதத்தை ஏற்படுத்தியது என பிலிப்பின்ஸ் கடலோர காவல்படை அதிகாரிகள் குற்றஞ்சாட்டினர்.
   i. பிலிப்பின்ஸ் நாட்டின் மீன்வளம் மற்றும் நீர்வளப் பணியகத்தின் கப்பல், பிலிப்பின்ஸ் ஆக்கிரமித்துள்ள 'திட்டு' என்ற தீவுக்கு அருகே நங்கூரமிடப்பட்டிருந்தது. அப்போது அந்தக் கப்பலை நோக்கி சீனக் கடலோர காவல் படை மற்றும் சந்தேகிக்கப்படும் போராளிக் கப்பல்கள் ஆகியவை ஆக்ரோஷமாக நெருங்கின.
   ii. பின்னர், சீனக் கப்பல்கள் வலுவான தண்ணீர் பீரங் கியை பயன்படுத்தி பிலிப்பின்ஸ் கப்பலைத் தாக்கியதுடன் கப்பலின் பின்புறத்தில் ஒரு கப்பல் மோதியது. இதில் பிலிப்பின்ஸ் கப்பல் சேதமடைந்தது. ஆனால், கப்பலில் இருந்த பணியாளர்கள் யாருக்கும் காயம் ஏற்பட வில்லை என்று அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

iii. தென் சீனக் கடலில் உள்ள ஸ்ப்ராட்லிஸ் தீவுக்கூட்டத்தில் 9 பிலிப்பின்ஸ் ஆக்கிரமிப்பு தீவுகளில் இந்தத் 'திட்டு' தீவு மிகப் பெரியதாகும். இது பல நாடுகளால் உரிமை கோரப்பட்டு வருகிறது.

iv. தென் சீன கடலின் முழுப் பகுதியையும் உரிமை கொண்டாடும் சீனா, திட்டு தீவிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள சுபி ரீஃப் உள்பட அருகிலுள்ள 7 செயற்கைத் தீவுகளிலும் ராணுவத் தளங்களை அமைத்துள்ளது.

v. நிலநடுக்கங்கள்கள் மற்றும் சூறாவளி உள்ளிட்ட உள் நாட்டு நெருக்கடிகளால் ஏற்கெனவே பாதித்திருக்கும் பிலிப்பின்ஸ் நாட்டின் அதிபர் மார்கோஸ் நிர்வாகத்துக்கு மற்றொரு மிகப்பெரிய அழுத்தத்தை இந்தச் சம்பவம் ஏற்படுத்தியுள்ளது.

4. ராணுவ வீரர்களுக்கு தடையின்றி ஊதியம் வழங்க பெண்டகனுக்கு (பாதுகாப்புத் துறை) அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உத்தரவிட்டார்.

   i. அமெரிக்க அரசுத் துறை கடந்த 1-ஆம் தேதி முதல் முடங்கியுள்ளதால் ஆயிரக்கணக்கான பணியாளர்கள் தற்காலிகமாக ஊதியமின்றி விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளனர். பலர் ஊதியமின்றி பணியாற்றி வருகின்றனர்.

   ii. அமெரிக்க அரசு இயங்கத் தேவைப்படும் பட்ஜெட்டுக்கு ஒப்புதல் அளிக்க ஒவ்வோர் - ஆண்டும் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் (செனட் மற்றும் பிர திநிதிகள் அவை) நிதி மசோதா நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால், செனட் அவையில் தற்போது ஆளும் குடியரசு கட்சி மற்றும் எதிர்க்கட்சியான ஜனஜனநாயக கட்சி இடையே ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக நிகழாண்டு நிதி மசோதா நிறைவேற்றப்படவில்லை. இதனால் கடந்த 1-ஆம் தேதிமுதல் அமெரிக்க அரசுத் துறை முடங்கியுள்ளது.

   iii. அமெரிக்க ராணுவத்தில் 13 லட்சம் முழுநேர வீரர்கள் தற்போது பணியாற்றிவருகின்றனர். இவர்களுக்கு ஆராய்ச்சி, மேம்பாட்டுச் சோதனை மற்றும் மதிப்பீட்டு நிதியில் உள்ள ரூ.70,976 கோடி (8 பில்லியன் டாலர்) மூலம் ஊதியம் வழங்கப்படவுள்ளதாக பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

   iv. கடந்த 12 ஆண்டுகளில் மூன்றாவது முறையாக அரசுத் துறைகள் முடங்கியுள்ளது பாதுகாப்புத் துறையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினரை கவலையில் ஆழ்த்தியுள்ளது. கடந்த காலங்களில் அரசுத் துறை முடங்கும்போது ராணுவ வீரர்களுக்கு ஊதியம் வழங்குவதை உறுதிப்படுத்த நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

5. நாடு முழுவதும் நிலுவையில் உள்ள லட்சக் கணக்கான குற்ற வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காணும் வகையில் தற்காலிக நீதிபதிகளை நியமனம் செய்ய உச்சநீதிமன்றம் அனுமதி அளித்தபோதிலும், கடந்த 9 மாதங்களாக இதற்கான எந்தவொரு பரிந்துரையையும் உயர்நீதிமன்றங்கள் அனுப்பாதது தெரியவந்துள்ளது.

   i. நாடு முழுவதும் 18 லட்சத்துக்கும் அதிகமான குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதில் ஆயிரக்கணக்கான வழக்குகள் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளன.

   ii. இந்த வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காணும் விதமாக உயர்நீதிமன்றங்கள் தற்காலிக நீதிபதிகள் நியமனம் செய்துகொள்ள அனுமதித்து கடந்த ஜனவரி 30-ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

   iii. அதிக எண்ணிக்கையில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து கையாள உதவுவதற்கு ஓய்வுபெற்ற நீதிபதிகளை உயர்நீதிமன்றங்களில் தற்காலிக நீதிபதிகளாக நியமித்துக்கொள்ள அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 224ஏ அனுமதிக்கிறது.

   iv. இந்த விதியின் கீழ், தற்காலிக நீதிபதிகளை நியமித்துக்கொள்ள அனுமதித்து

உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. தற்காலிக நீதிபதிகள் நியமனம் என்பது, அனுதிமக்கப்பட்ட மொத்த நீதிபதி பணியிடங்களில் 10 சதவீ தத்துக்கு மிகக் கூடாது என்றும் அந்த உத்தரவில் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது.

v. உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமன நடைமுறையின்படி, நீதிபதிகள் நியமனத்துக்கான பெயர் பரிந்துரையை உயர்நீதிமன்ற கொலீஜியங்கள் மத்திய சட்ட அமைச்சகத்தின் நீதித் துறைக்கு அனுப்பும். மத்திய சட்ட அமைச்சகம், அந்த பரிந்துரையில் கூடுதல் தகவல்களை இணைத்து, உச்சநீதிமன்ற கொலீஜியத்தின் பரிசீலனைக்கு அனுப்பும்.

vi. இந்தப் பட்டியலில் இருந்து உச்சநீதிமன்ற கொலீஜியம் பெயர்களைத் தெரிவு செய்து, உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்வதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யும்.

vii. மத்திய அரசு அதை ஏற்கும் பட்சத்தில், நீதிபதி நியமன உத்தரவில் குடியரசுத் தலைவர் கையொப்பமிட்டு, புதிய நீதிபதி நியமனம் செய்யப்படுவார். இதே நடைமுறைதான், தற்காலிக நீதிபதி நியமனத்திலும் பின்பற்றப்படும் என்றபோதிலும், தற்காலிக நீதிபதி நியமன உத்தரவில் குடியரசுத் தலைவர் கையொப்பம் இடம்பெறாது. இருந்தபோதிலும், குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்படும்.

viii. இதுகுறித்து மத்திய சட்ட அமைச்சக வட்டாரங்கள் கூறுகையில், 'நாடு முழுவதும் 25 உயர்நீதிமன்றங்கள் உள்ள நிலையில், ஒரு உயர்நீ திமன்றம்கூட தற்காலிக நீதிபதிகள் நியமனம் தொடர்பான பரிந்துரையை இதுவரை சமர்ப்பிக்கவில்லை' என்றனர்.

6. தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கான 14-ஆவது சுற்றுப் பேச்சு வார்த்தைகளை இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் வெற்றிகரமாக நிறைவு செய்தன.

i. இந்த ஒப்பந்தத்தை டிசம்பர்குள் இறுதி செய்வதை இருதரப்பினரும் நோக்கமாகக் கொண்டுள்ளனர். பிரஸ்ஸல்ஸில் அக்டோபர் 6-ஆம் தேதி தொடங்கிய இந்த ஐந்து நாள் பேச்சுவார்த்தையில் பொருள்கள் மற்றும் சேவைகளின் வர்த்தகம் குறித்து விவாதிக்கப்பட்டது.

ii. இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையேயான இந்த ஒப்பந்தம் பொருள்கள் மற்றும் சேவைகளில் வர்த்தகம், முதலீடு, சுங்கம் மற்றும் நிலையான வளர்ச்சி உள்ளிட்ட 23 கொள்கைகளை உள்ளடக்கியது. முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றும் புவியியல் அறிகுறிகளில் ஒப்பந்தம் ஆகியவையும் இதில் அடங்கும்.

iii. 2024-25-ஆம்ஆண்டில், ஐரோப்பிய யூனியன் உடனான இந்தியாவின் இருதரப்புவர்த்தகம் 136.53 பில்லியன் அமெரிக்க டாலர்களை (சுமார் ரூ.12.12 லட்சம் கோடி) எட்டியது. இதில் இந்தியாவின் ஏற்றுமதி 75.85 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும் (சுமார் ரூ.6.73 லட்சம் கோடி), இறக்குமதி 60.68 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும் (சுமார் 5.39 லட்சம் கோடி) இருந்தது.

iv. 2023-இல் சேவைகள் துறையில் இருதரப்பு வர்த்தகம் 51.45 பில்லியன் அமெரிக்க டாலர்களாக (ரூ.4.57 லட்சம் கோடி) மதிப்பிடப்பட்டது.

v. இந்தியாவின் ஏற்றுமதியில் ஐரோப்பிய யூனியன் 17 சதவீதம் கொண்டுள்ளது. அதே நேரத்தில் இந்தியாவிற்கான ஐரோப்பிய யூனியனின் ஏற்றுமதி அதன் உலகளாவிய ஏற்றுமதியில் 9 சதவீதமாக உள்ளது.

7. எல்லைப் பாதுகாப்புப் படை (பிஎஸ்எஃப்) விமானப் பிரிவில் 50 ஆண்டுகளில் முதல் பெண் விமானப் பொறியாளராக பாவனா சௌதரி என்ற அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

i. பயிற்சியை நிறைவு செய்த பாவனா சௌதரி உள்பட ஐந்து அதிகாரிகளுக்கு பிஎஸ்எஃப் தலைவர் தல்ஜித் சிங் சௌதரி அண்மையில் பதக்கங்களை

வழங்கினார். இதன்மூலம் பிஎஸ்எஃப் விமானப் பிரிவின் முதல் பெண் விமானப் பொறியாளராக பாவனா சௌதரி நியமிக்கப்பட்டார்.

ii. டிசம்பர் 1965-இல் உருவாக்கப்பட்ட பிஎஸ்எஃப் படை பிரிவு சுமார் 3 லட்சம் பணியாளர்களைக் கொண்டுள்ளது. இது பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்துடனான இந்தியாவின் எல்லைகளைப் பாதுகாப்பதுடன் உள்நாட்டுப் பாதுகாப்புக்கும் உதவுகிறது.

8. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது கூடுதலாக 100 சதவீத வரியை அமெரிக்கா விதித்தால் உரிய பதிலடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என்று சீனா எச்சரிக்கை விடுத்தது.

i. மேலும், 'உலக அமைதியைப் பாதுகாக்கும் நோக்கில் சட்டபூர்வ நடவடிக்கையாகவே அரியவகை மண் தாதுக்கள் மற்றும் அது தொடர்பான பொருள்கள் மீது புதிய ஏற்றுமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன' என்று தனது நடவடிக்கையை சீனா நியாயப்படுத்தியுள்ளது.

ii. ஏற்றுமதி கட்டுப்பாடு: அரியவகை கனிமங்கள் ஏற்றுமதிக்கு சீனா புதிய கட்டுப்பாடுகளை விதித்தது. அதாவது, சீனாவில் பூமிக்கு அடியிலிருந்து வெட்டி யெடுக்கப்படும் அரிய வகை கனிமங்களை கப்பல்கள் மூலம் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் சீன அரசிடம் சிறப்பு அனுமதி பெற வேண்டும்.

iii. மேலும், அரியவகை மண் தாதுக்களை வெட்டியெடுத்தல், உருக்குதல் மற்றும் மறுசுழற்சி செய்வதில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்களை ஏற்றுமதி செய்வதற்கும் அரசின் அனுமதியைப் பெற வேண்டும். அதோடு, ராணுவ உபகரணங்களில் பயன்படுத்தப்படும் உலோகங்களுக்கான எந்தவொரு ஏற்றுமதி கோரிக்கையும் ரத்து செய்யப்படுகிறது என்று சீனா அறிவித்தது.